செய்தி வெளியீடுஎண்: 410 நாள்–6.7.2007

## பெரம்பலூர் மாவட்டத்தில் பல்பொருள் உற்பத்தித் தொழில் மையம்

## முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் ஐதராபாத் ஜி.வி.கே. குழுமத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம்

பெரம்பலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் அங்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக ஒரு சிறப்புத் தொழில் மையம் அமைக்கப்படுமென முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2006–2007 ஆம் ஆண்டிற்கான தொழில்துறை மானியக் கோரிக்கையின்பொழுது அறிவித்தார்கள். மத்திய அரசு இத்திட்டத்திற்குக் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தைக் கூட்டுத் துறையில் செயல்படுத்த டிட்கோ நிறுவனம் உலகளாவிய போட்டிமுறை மூலம் ஐதராபாத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஜி.வி.கே. (G.V.K.) குழுமத்தைத் தேர்வு செய்துள்ளது. இக்குழுமம், இந்தியாவில் பல்வகைக் கட்டமைப்புகள் சார்ந்த துறைகளில் சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

இத்திட்டத்திற்காக நிலம் வாங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், தனி மின்சார நிலையம் அமைத்தல், பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் போன்ற வகைகளில் ஏறத்தாழ 1500 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் பத்தாண்டுகளுக்குள் இவ்வளாகத்தில் அமையவுள்ள தொழிற்சாலைகளால் ஏறத்தாழ 5000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், ஏறத்தாழ 50 ஆயிரம் பேருக்கும் மேலாக வேலைவாய்ப்புகள் கிடைக்கும்; ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் ஏற்படும். இத்திட்டத்தின் காரணமாக பெரம்பலூர், கடலூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் வேலைவாய்ப்புகள் பெருகி, பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

2009 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படவுள்ள இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (6.7.2007) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் டிட்கோ நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.க.இராமசுந்தரம், இ.ஆ.ப., ஜி.வி.கே. குழுமத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. ஜி.வி.கிருஷ்ணா ரெட்டி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்ச்சியின்பொழுது தமிழக மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி, மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, தொழில் துறைச் செயலாளர், திரு. சக்தி காந்ததாஸ், இ.ஆ.ப., ஜி.வி.கே. குழுமத்தின் துணைத் தலைவர், திரு. சஞ்சய் ரெட்டி, நிர்வாக இயக்குநர் திரு.சாம் பூபால் ஆகியோர் உடனிருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9